# சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

# OS. No.398/2023

## 15.09.2025

## P.W.1- கவிதா

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

பிரதிவாதி 02.09.2021ம் தேதி கடன் பெற்றாரா என்றால் கடன் பெற்றார். 2021ல் பிரதிவாதியின் மகள் கடன் பெற்றாரா என்றால் இல்லை, அதற்கு முன்பாக பெற்றார். நான் பிராதில் பிரதிவாதி கடன் பெற்ற நாள்முதல் அசலும், வட்டியும் திரும்ப செலுத்தவில்லை என கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கணக்கு (கணக்கு எண்.2332000000856) வைத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வங்கி கணக்கில் பிரதிவாதி பணம் செலுத்தியிருந்தால் அதில் பதிவு இருக்கும் என்றால் சரிதான். 16.02.2021ல் ரூ.15,000த்தை எனது வங்கி கணக்கில் பிரதிவாதி செலுத்தியுள்ளார் என்றால் அவரது மகள் வாங்கிய கடனுக்கு தான் செலுத்தினார். 16.02.2021லிருந்து 02.05.2022 வரையில் ரூ.1,25,000 பணத்தை பிரதிவாதி செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மகள் வாங்கிய கடனை தான் செலுத்தியுள்ளார். பிரதிவாதியின் மகள் அவ்வப்போது ரூ.4 லட்சம் வரை வாங்கினார். தேதிகள் ஞாபகமில்லை. அதிகபட்சமாக ஒரே தவணையில் பிரதிவாதியின் மகளுக்கு ரூ.1,50,000 கொடுத்தேன். அதற்கான ஆவணம் எழுதி வாங்கினேன். காசோலை மற்றும் புரோநோட் எழுதி கொடுத்தார். பிரதிவாதியின் கடனிற்கு முன்பே ஏற்பட்டதாகும். பிரதிவாதி எனது வங்கி கணக்கில் செலுத்திய தவணைகள் 2021, 2022வது வருடங்கள் ஆகும். பிரதிவாதியின் மகள் என்னிடம் வாங்கிய கடனை ஏற்கனவே திருப்பி செலுத்தியதாக சொல்லிவிட்டு தற்போது 2021, 2022 காலகட்டங்களில் பிரதிவாதியின் மகளின் பணத்தை திருப்பி செலுத்தியதாக சொல்வது பிரதிவாதியை ஏமாற்றுவதற்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ரசீதுகள் தாவா கடன் தொகைக்கான ரசீதுகள் என்றாலும், நான் பிரதிவாதியின் மகளுக்கு கடன் கொடுத்திருந்தால், அவர் எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் ஆவணங்களில் ஜெராக்ஸ் ஆவணங்கள் வைத்திருப்பேன் என்றாலும், தற்போது

பிரதிவாதியின் மகளின் ஆவணங்களை பிரதிவாதியிடம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி பல்வேறு தவனைகளில் வங்கிகள் மூலம் ரூ.1,75,500 செலுத்தியுள்ளார், தற்போது வழக்கிற்காக பிரதிவாதியின் மகள் வாங்கிய தொகைக்கு செலுத்தியதாக ஆவணங்களின்றி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி செலுத்திய தவனை தொகைகளின் முழுவிவரங்களை வழக்குரையில் சொல்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது வங்கி கணக்கு புத்தகத்தை தாக்கல் செய்தால் பிரதிவாதி எவ்வளவு தவணைகளில் எவ்வளவு தொகை செலுத்தியுள்ளார் என்ற விவரம் புலப்படும், அதை தாக்கல் செய்ய தயாரா என்றால் தாக்கல் செய்யலாம். நான் முன்னுக்கு பின் முரணாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.09.15 17:26:33 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.